# ஆத்ம ஞான இரகசியங்கள்

**நாம் யார்?**
**நாம் ஏன் இங்கே உள்ளோம்?**

*மூலம் : Secrets of the Undiscovered Self*

ஸ்ரீ ஸ்ரீமத்
பக்தி வேதாந்த நாராயண மகாராஜா

தமிழாக்கம் :
பகவதி காந்த தாஸா
சியாமலி தேவி தாஸி

*First Edition :* July 2007

*Published by :*

**Centre for Bhakti Studies**
Mechanicsburg, PA, USA
www.bhaktistudies.com
e-mail : igvt.hbg@gmail.com

*Printed by :*

Vaigai Achagam
Madurai - 625 001

# சமர்ப்பணம்

நான் என்னுடைய குரு தேவரான நித்ய லீலா பிரவிஸ்ட ஓம் விஷ்ணு பாத ஸ்ரீ ஸ்ரீமத் பக்தி பிரஞ்ஞான கேசவ கோஸ்வாமி மகாராஜாவினது கருணையை யாசிக்கிறேன். நான் என் ஆயிரக்கணக்கான மிகத் தாழ்மையான வணக்கங்களை அவரது பாத கமலங்களில் காணிக்கையாக்குகிறேன். அதேபோல் என் சிக்ஷ குருவான நித்ய லீலா பிரவிஸ்ட ஓம் விஷ்ணு பாத ஸ்ரீ ஸ்ரீமத் பக்தி வேதாந்த சுவாமி மகாராஜாவின் மலர்ப் பாதங்களில் என் ஆயிரக்கணக்கான மிகத் தாழ்மையான வணக்கங்களைச் செலுத்துகிறேன்.

தற்காலத்தில், என் சிக்ஷ குருதான் வேத ஞானங்கள் அனைத்தும் அடங்கிய பொக்கிஷப் பெட்டகத்தைத் திறந்து அதை உலகம் முழுவதும் விநியோகிக்கச் செய்தார். அந்தப் பெட்டகத்தின் திறவுகோல் அவரிடமும் என் குரு தேவரிடமுமே இருந்தது. அவர்கள் அந்தத் திறவுகோலை என்னிடம் தந்து, அந்த பொக்கிஷங்கள் அனைத்தையும் உங்கள் எல்லோருடனும் பகிர்ந்தளிக்கக் கட்டளையிட்டார்கள்.

– ஸ்ரீல பக்தி வேதாந்த நாராயண மகாராஜா

# முன்னுரை

ஆத்ம ஞானமானது இந்தப் பூவுலகங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டது. நம் ஜீவன், அல்லது ஆத்மா ஆன்மீக உலகத்திற்கு *(Spiritual World)* மட்டுமே சம்பந்தமானது. இதனால், எந்தவிதமான பூத அறிவாலும், எவ்வளவு திறமை பெற்ற விஞ்ஞானிகளாலும் அதை பூதக் கண்களால் காண இயலாது. அதே சமயம் அந்த ஆத்மாக்களின் செயல்களினால் நாம் அவற்றை மறைமுகமாகக் காண்கிறோம். ஆன்மீக அறிவில் முதிர்ந்த பெரும் முனிவர்களும் உயர்ந்த பக்திமான்களும் ஆத்மாவையும் பரமாத்மாவையும் பற்றி நன்கு உணர்ந்தவர்கள். அவர்கள் ஆத்மாவைப் பற்றி என்ன கூறுகிறார்கள்? .............. நம் ஒவ்வொருவரின் ஆத்மாவும் ஆயிரக்கணக்கான சூரியன்களை விடவும் மிகவும் ஒளியும் சக்தியும் வாய்ந்தது என்கிறார்கள்.

இந்தச் சிறு நூல், அத்தகைய ஆத்மஞானமும் இறைஞானமும் முற்றும் பெற்றுணர்ந்து, பக்தித் தொண்டில் நிகரின்றி புகழ் பெற்று விளங்கும் ஸ்ரீல பக்தி வேதாந்த நாராயண மகாராஜா அவர்கள் ஆங்கில வருடம் 2002-இல் மார்ச் மாதம் மலேசியாவில் கோலாலம்பூர் நகரில் ஆற்றிய சிறு சொற்பொழிவிலிருந்து உருவாக்கப்பட்டதே.

நம் ஒவ்வொருவரின் உடலில் தற்காலிகமாக வசிக்கும் நம் ஆத்மாவைப் பற்றி ஸ்ரீல நாராயண மகாராஜாவின் சிக்ஷ குருவான ஸ்ரீல பிரபுபாதா கூறிய ஒரு உதாரணம் இங்கே குறிப்பிடத்தக்கது. அவர், நம் உடலை ஒரு கிளிக் கூண்டுக்கும், நம் உயிரை அதனுள் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் பறவை (அல்லது கிளி)க்கும் ஒப்பிடுகிறார். நாம் இந்தக் கிளிக்கூண்டைப் பற்றி மட்டுமே எப்போதும் அக்கறைகொண்டு, அதைக் கருத்தாகத் துடைப்பதிலும், அழகுபடுத்துவதிலுமே நம்மை முழுவதுமாக ஈடுபடுத்துகிறோம். அதன் உள்ளிருக்கும் கிளியைப் பற்றி அக்கரைப்படுவதே இல்லை. ஆனால் உண்மையென்ன? கிளியை நாம் கிளிக்கூண்டுக்காகவா வைத்துள்ளோம்? இதே போல்தான் நம் உயிருக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் வெறும் உடல், மனம் இவைகளை மட்டுமே கவனிக்கிறோம். கிளியோ, கவனிப்பாரின்றி வாடுகிறது.

நாம் உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமானால் நம் உள்ளிருக்கும் ஆத்மாவை மகிழ்ச்சிப்படுத்த வேண்டும். ஏனென்றால் நாம் அனைவரும் அந்த ஆத்மாவே! கிளிக் கூண்டான உடலை மட்டும் கவனித்து அதன் உள்வாழும் கிளியான நம் ஆத்மாவின் தேவையை மறந்து விடக்கூடாது.

அப்படியானால் நம் உடலினுள் வசிக்கும் ஆத்மாவின் தேவைகள் என்ன? இதை அறிய வேண்டியது மிக அவசியம். "கூண்டில் அடைக்கப்பட்டிருக்கும் ஆத்மாவோ, இந்த பூத உலகத்தை உதறியெறிந்து விட்டு, தன் சொந்த இடமான ஆன்மீக உலகத்துக்குச் சென்று முழு சுதந்திரமாக வாழ ஏங்குகிறது. நான்கு பக்கங்களும் சுவர்களால் அடைக்கப்பட்டிருக்கும் பிரம்மாண்டங்கள் அதற்கு இருளடைந்த சிறைச் சாலைகளே. பேரானந்தமயமான வெளிச்சத்திற்காக அது எப்போதுமே ஏங்கிக் கொண்டிருக்கிறது. பரமாத்மாவின் ஒரு சிறு அம்சமான நம் உயிர், அந்த முழுமையான பரமாத்மாவிடமே சென்று, என்றும் பேரானந்தமுடன் இருக்கத் துடித்துக் கொண்டிருக்கிறது. அந்த இறைவனிடம் சென்றடைந்தால் மட்டுமே ஆத்மா திருப்தி அடைய முடியும்."

நாம் இந்த உடலோ, மனமோ அல்ல என்பதை மிகவும் முக்கியமாக உணர்ந்தறிய வேண்டும். எங்கள் குரு தேவரான ஸ்ரீல நாராயண மகாராஜாவின் சொற்பொழிவிலிருந்து தொகுக்கப்பட்ட இந்தச் சிறு நூலில் வரும் சம்பவங்கள் அனைத்தும் வேதங்கள், புராணங்கள் மற்றும் உபநிஷத்துக்களிலிருந்து எடுக்கப்பட்டவை. இந்தத் தமிழாக்கம் அவரது ஆங்கில மொழிப்பெயர்ப்பான, "*Secrets of the Undiscovered Self*" என்ற நூலைத் தழுவியது. இந்தத் தமிழாக்கத்தில் ஏதேனும் தவறுகளிருந்தால் பக்தகோடிகள் எங்களை மன்னிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

27 மார்ச் 2007 — பகவதி காந்த தாஸா

ஸ்ரீராம நவமி — சியாமலி தேவி தாஸி

## நன்றியுரை

இந்தச் சிறு பதிப்பை தமிழில் வெளியிட கீழ்க்கண்ட பக்தர்களும், பக்தைகளும் மிகவும் துணைசெய்துள்ளனர். அவர்களுடைய உதவியே இந்நூல் சிறப்புடன் வெளிவர முக்கியமான காரணமாகும்.

***Finance :***

i) NAIDOO R. VEERAPPAN
New York, USA

ii) Devotees of BHAKTI MANDIR
Piscateway, New Jersey, USA

***Proof Reading :***

Srimathi RAJAMMAL ELANGO, Madurai, India

Shri ELANGO CHELLAPPAN, Madurai, India

Srimathi T. LETCHUMY
Headmistress, Penang, Malaysia

SHRI RAM TULSI DAS PRABU, Penang, Malaysia

***Paintings :***

Srimathi SYAMARANI DIDI

***Co-ordination :***

ACYUTA KRISHNA PRABHU

***Publisher :***

- Published in Tamil with the permission from Gaudiya Vedanta Publications (GVP)
- Permission to produce audio version of this book also has been granted by GVP.
- Permission to use paintings and art work was obtained from Smt. Syamarani Didi.

## பொருளடக்கம்

நாம் அனைவரும் சுத்த ஆத்மாக்களே *9*

நாம் இந்த உடல் அல்ல *11*

ஒரு மன்னனின் குழப்பம் *13*

நாம் ஒவ்வொருவரும் இறைவனின் அம்சமே *25*

இறைவனின் இயற்கையான சொரூபம் *28*

ஆத்ம உணர்வுக்கு வழிமுறை *31*

உண்மையான குரு *33*

# 1. நாம் அனைவரும் சுத்த ஆத்மாக்களே

வெகு காலங்களுக்கு முன்னால், அஸ்டவக்ர ரிஷி என்ற ஒரு பெரும் சக்தி படைத்த முனிவர் வாழ்ந்து வந்தார். ஆனால் அவர் அவ்வளவு சக்தியுள்ளவராயிருந்தும், அவரது உடலோ எட்டு இடங்களில் கூன் விழுந்து, அவர் நடக்கும் போது அது ஓர் ஏளனமான தோற்றத்தை அவருக்கு அளித்தது. அவர் அந்த கோணலான உடம்பை நெளித்து வளைத்து நடப்பதைப் பார்த்த எவரும் உடனே சிரித்துவிடுவர். ஆனால், அவரது உடல் விகாரமாக இருந்தாலும், அவரது இதயமோ மிகவும் பரிசுத்தமாக இருந்தது. அவர் ஒரு முற்றும் உணர்ந்த ஞானியாதலால், உடலுக்கும் ஆத்மாவுக்குமுள்ள வித்தியாசங்களை அவர் நன்கு அறிந்திருந்தார்.

ஒரு சமயம் பெரும் சக்கரவர்த்தியான ஜனக மகாராஜா அஸ்டவக்ர ரிஷியையும், மற்றும் அநேக புகழ்வாய்ந்த முனிவர்களையும் தன் இராஜசபைக்கு அழைத்திருந்தார். அஸ்டவக்ர ரிஷி, தன் கோணலான உடம்பை நெளித்துக் கொண்டு சபையினுள் நுழைந்தார். அந்த விநோதமான காட்சியைப் பார்த்ததும் அவையோர் அனைவரும் தங்களை அடக்க முடியாமல் வாய் விட்டுச் சிரித்தனர். அஸ்டவக்ர ரிஷி அவர்கள் அனைவரையும் ஒரு நோட்டம் விட்டார். பின்னர் உரத்த குரலில் அவர்களைவிடவும் பலமாகச் சிரித்தார்! சற்றும் எதிர்பார்க்காத அவரது பதில் சிரிப்பைக் கேட்ட சபையினர், “நாமோ அவரைப் பார்த்துச் சிரிக்கிறோம். ஆனால் அவர் ஏன் பதிலுக்கு நம்மை விடவும் மிக உரத்த குரலில் நம்மைப் பார்த்துச் சிரிக்கிறார்?” என்று அவர்களுக்குள்ளேயே பேசிக் கொண்டனர்.

ஜனக மகாராஜா தனது அரியாசனத்திலிருந்து எழுந்து அஸ்டவக்ர ரிஷியைப் பார்த்து, “தாங்கள் என் இவ்வளவு உரத்த குரலில் சிரிக்கிறீர்கள்?” என்று பணிவுடன் கேட்டார்.

அதற்குப் பதிலாக அஸ்டவக்ர ரிஷி, “நான் இங்கே மிகவும் அறிவில் சிறந்து விளங்கும் மேன்மை மிக்க மகா மேதைகளும், முனிவர்களும், மாபெரும் ரிஷிகளும் கூடியிருக்கும் சபையினுள் வருகிறேன் என்று நினைத்தேன். ஆனால் இப்போதுதான் புரிந்து கொண்டேன் இது வெறும் செருப்புத் தைப்பவர்கள் கூடியிருக்கும் இடமென்று. அவர்களுக்கு உடம்பின் மேலுள்ள தோலில் மட்டுமே நாட்டம்! உங்கள் ஆர்வம் அனைத்தும் ஒருவன் அழகானவனா அல்லது அழகில்லாதவனா, இளம் வயதினனா அல்லது வயதானவனா, உடலில் வியாதியுள்ளவனா அல்லது வியாதி இல்லாதவனா என்பதில் மட்டுமே! இவ்வாறு உங்கள் அனைவரின் மனங்களும் இந்த வெளிப்புறத்தோலையும், தோற்றத்தையும் மட்டும்தான் பார்க்கின்றன. உண்மையிலேயே துறவிகளும், முனிவர்களும் எவ்வாறு ஆத்மாவை மட்டுமே பார்ப்பார்களோ அவ்வாறு நீங்கள் பார்க்கவில்லை. இந்த அழியும் உடம்பினுள் நீக்கமற நிலைப்பெற்று இருக்கும் அழியாத ஜீவாத்மாவையே நீங்கள் பார்க்கவேண்டும்” என்று கூறினார்.

இந்த வார்த்தைகள் ஜனக மகாராஜாவின் நெஞ்சினுள் ஆழமாகத் தைத்தன. அஸ்டவக்ர ரிஷி ஒரு முற்றுமுணர்ந்த மகாமுனி என்பதை இப்போது புரிந்து கொண்டார். ஜனக மகாராஜா உடனே தனது அரியாசனத்திலிருந்து நடந்து வந்து அவரிடம் தாழ்ந்து தனது வணக்கங்களைச் செலுத்தி, மிகவும் அன்புடன் அழைத்துக் கொண்டு போய் தன் அரியாசனத்தில் அமரச் செய்தார். அது மட்டுமல்ல, அவரைத் தன் குருவாகவும் ஏற்றுக் கொண்டார்.

## 2. நாம் இந்த உடல் அல்ல

முதன்முதலாக நாம் மிகத்தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் நாம் இந்த உடம்பு அல்ல என்பதே. நம் உடம்பு என்பது என்ன? வெறும் எலும்புகளும், இரத்தமும், மலமும், சிறுநீரும் மற்றும் அசுத்தமான பொருட்களும் நிறைந்த வெறும் தோல் பையேதான்! நம் மனமும் கூட, நம் உடம்பிலிருந்து வித்தியாசமானது என்றாலும் அதுவும் முழுக்க முழுக்க இந்த பூத உலகப்பொருள் சம்பந்தப்பட்டதே. அது நம் ஆத்மாவுடன் சேர்ந்ததல்ல.

மேலும் நம் மனம், அற்ப விஷயங்களிலும், நிரந்தமில்லாத பணம், பொருட்களிடமும் நம்மை ஈர்த்து நம்மைக் குழப்பிவிடும். அற்ப இன்பங்களில் நம்மை இழுத்து, ஆசை, கோபம், பொறாமை இவற்றில் சிக்க வைத்து நம்மை ஏமாற்றி விடும். நாம் இந்த உடலோ, மனமோ அல்ல.

நம் பூத உடல் நிலையானது அல்ல. அழிந்து விடக் கூடியது. எவ்வளவு பெரிய விஞ்ஞானிகளாலும், மிகவும் அறிவுள்ள மருத்துவர்களாலும் கூட இந்த உடலின் அழிவைத் தடுக்க இயலாது. எப்படியும் இருபதோ, முப்பதோ இல்லை ஐம்பதோ, குறிப்பிட்ட வருடங்களுக்குப் பின்னால் நாம் ஒருநாள் வயதாகியேதான் தீரவேண்டும். நம் இளமை, அழகு, பலம் அனைத்தும் போய் கம்பு (கைத்தடி) இல்லாமல் நம்மால் நடக்கமுடியாத ஒரு நிலை எப்படியும் வந்து தீரும். அதன்பின் நம் உடல் அழிந்து மண்ணோடு மண்ணாகி விடும். நாம் நம் வாழ்நாளில், எவ்வளவு செல்வங்களைச் சேகரித்து வைத்திருந்தாலும் ஒரு சிறு துரும்பைக் கூட நம்மால் கொண்டு செல்ல முடியாது. எல்லாவற்றையும் நாம் விட்டு விட்டுத்தான் செல்ல வேண்டும். எவராலும் இதைத் தடுக்க முடியாது. ஆனால் நம்மை நாம் இறைவனிடம் சமர்ப்பித்து அவருக்கு அன்பு சேவை செய்தால் நம்மையும் நமது உயிரையும் அவர் காத்துக் கொள்வார். இந்த பூலோகத்திலும் ஆனந்தமாக இருப்பதுடன், மறுமையிலும் அவரிடம் நிரந்தரமாகச் சேர்ந்து பேரானந்தம் அடையலாம்.

நாம் ஒவ்வொருவரும் இறைவனின் அம்சமே. புல், செடி, கொடிகள், மரங்கள், பறவைகள், மிருகங்கள் மேலும் உயர்ந்த பிறவிகளான மனிதர்கள், தேவர்கள் இப்படி எல்லோருமே அவரது அம்சங்களேயாகும். புண்ணிய பூமியான இந்தியாவில் தோன்றிய வேதநூல்கள், "இறைவன் ஒருவனே" என்றும், இந்த உலகத்தில் காணும் அனைத்துச் சக்திகளும் அவரது ஒரு மிகச்சிறிய பாகமே என்றும் கூறுகின்றன. ஆனால் நாத்திகர்களோ, இறைவனொருவன் இருப்பதை நம்பாமல் அவரது சிறு சக்தியான இயற்கையை மட்டுமே நம்புகின்றனர். எல்லாமே இயற்கையிலிருந்து பிறந்து பின்னர் இயற்கையிலேயே ஐக்கியம் அடைவதாக அவர்கள் நம்புகின்றனர்.

இறைவன், மனிதர்களை அவரது சொந்த சொரூபத்தின் சாயலில் படைத்திருக்கிறார். ஆனால் நாம் அவருக்கு சேவகம் செய்து அவருடன் வாழ்வதற்குப் பதிலாக, பூலோக அற்ப இன்பத்திற்காக அவரிடம் நம் புறமுதுகைக் காட்டி விட்டு, இங்கு மாயையின் வலையில் நன்றாக சிக்கி உழன்று கொண்டிருக்கின்றோம். இது நம் துரதிர்ஷ்டமே. அது மட்டுமல்ல. "நம் உடலே நாம்" என்று தவறாகவும் எண்ணிக் கொண்டிருக்கின்றோம். ஒவ்வொரு நாளும் நாம் மிகவும் கடினமாக உழைத்து பொருள் சேர்க்கிறோம். பெரும் பதவிகளை சிரமங்களுக்கிடையிலும் பற்றிப் பிடிக்கிறோம். எதற்காக? நம் உடலைப் பேணுவதற்காகவும் இன்பமாக இருப்பதற்காகவும் தானே? ஆனால் இது முழுக்க முழுக்க தவறான நோக்கமாகும். இவற்றால் இந்த உலகத்தில் நாம் உண்மையான மகிழ்ச்சியை ஒரு போதும் அடையமுடியாது.

## 3. ஒரு மன்னனின் குழப்பம்

முன்னொரு காலத்தில் ஹரிச்சந்திரன் என்ற மிகவும் புகழ்வாய்ந்த மன்னன் இந்தியாவில் வாழ்ந்து வந்தான். அவனது மனைவியின் பெயர் ஸைப்யா, மகன் பெயர் ரோகிதஸ்வா. ஹரிச்சந்திரன் மிகவும் உண்மையானவன் - எப்போதும் உண்மையை மட்டுமே பேசுபவன். தன் வாழ்நாளில் அவன் பொய் பேசியதே கிடையாது. மேலும், தன்னிடம் யார் எது கேட்டாலும் வாரி வழங்கும் கொடை வள்ளல். இப்படி நல்ல குணங்கள் அனைத்தும் இருந்ததால் விஸ்வாமித்திர முனிவர் அவன் மேல் கருணை கொண்டு, அவனை ஆன்மீக நிலையில் இன்னும் மேலே கொண்டு செல்ல எண்ணினார்.

விஸ்வாமித்திரர் நினைத்தார், "ஹரிச்சந்திரன் வெறும் பூதஉலக உண்மைகளை பரம உண்மைகள் என நம்பி அதைக் கடைப்பிடிக்கிறான். உண்மையில் அவற்றிற்கு எந்த விதமான மதிப்பும் கிடையாது. இறைவனின் சுத்த பக்தர்களைத் தவிர வேறு எவராலும், "உண்மையான உண்மை"யைப் பேச முடியாது. உதாரணமான நான் அவனிடம், "உன் பெயர் என்ன?" என்றுகேட்டால், "என் பெயர் ஹரிச்சந்திரன்" என்பான். "அவன் யார்?" என்றால், "அது என் மகன்" என்றும், "அவள் யார்?" என்று கேட்டால், "அது என் மனைவி" என்றும்தான் கூறுவான். ஆனால் பரம உண்மையென்னவென்றால், நாம் இந்த உடல் அல்ல. நாம் அனைவரும் ஜீவாத்மாக்கள். இறைவனின் நித்திய சேவகர்கள். இந்த பூலோக உறவுகள் எதுவுமே உண்மையல்ல." இவ்வாறாக விஸ்வாமித்திரரின் எண்ணங்கள் ஓடின.

விஸ்வாமித்திரரின் அக்கறை மேலும் வளர்ந்தது. எப்படியாவது ஹரிச்சந்திரனுக்கு பரம உண்மையை, அவனது நன்மைக்காக உபதேசிக்க வேண்டுமெனத் தீர்மானித்து ஒரு திட்டம் வகுத்தார்.

ஒரு நாள் இரவு அவர் ஹரிச்சந்திரன் கனவில் புகுந்து, "ஹரிச்சந்திரா, நீ ஓர் உத்தமமான அரசன். பெரிய கொடைவள்ளல். எப்போதும் உண்மையை மட்டுமே பேசுவாய். நீ இறைவழிபாட்டிலும் சிறந்தவன். நான் உன்னிடம் ஒரு தானம் கேட்க வேண்டும். தவறாமல் கொடுப்பாய் என்று நம்புகிறேன்" என்று கூறினார்.

ஹரிச்சந்திரன் உடனே தூக்கத்திலிருந்து விழித்து, "நிச்சயமாக என்ன கேட்டாலும் கொடுக்கிறேன்" என்று கூறினான். அப்போது விஸ்வாமித்திரரிடமிருந்து குரல் வந்தது, "உன் முழு இராஜ்ஜியத்தையும் எனக்குக் கொடுக்க வேண்டும்."

பதிலாக ஹரிச்சந்திரன், "அப்படியே நான் தருகிறேன்" என்று வாக்குக் கொடுத்தான்.

விஸ்வாமித்திரர் மறைந்து கொண்டார். மன்னன் திரும்பவும் தூக்கத்தில் ஆழ்ந்தான். காலையில் விழித்தபோது இரவில் நடந்தது அனைத்தையும் மறந்துவிட்டான். ஆனால் அன்று காலையிலேயே விஸ்வாமித்திரர் ஹரிச்சந்திரனின் அரண்மனைக்கு நேராக விஜயம் செய்தார். "ஹரிச்சந்திரா, நேற்று இரவு நீ கண்ட கனவு ஞாபகம் இருக்கிறதா?" என்று கேட்டார். "ஆம், எனக்கு ஞாபகம் வருகிறது" என்றான் ஹரிச்சந்திரன். "நீ உன் முழு இராஜ்ஜியத்தையும் எனக்குத் தானமாகக் கொடுத்து விட்டாய்" என்றார் விசுவாமித்திரர்.

"நான் ஒருவேளை கொடுத்திருக்கலாம். ஆனால் அது வெறும் கனவல்லவா?" என்று கூறினான் ஹரிச்சந்திரன்.

"இல்லை,. நான் உண்மையாகவே நேற்று இரவு வந்தேன். அது வெறும் கனவல்ல" என்றார் விசுவாமித்திரர்.

முனிவர்களும் ரிஷிகளும் தங்கள் சக்தியை உபயோகித்து எங்கும் எப்போதும், எவரது கனவிலும் செல்ல முடியும். சாதாரண

மக்களுக்கு அது அதிசயமாக இருக்கலாம். ஹரிச்சந்திரன் விஸ்வாமித்திர முனிவர் கூறியதை நம்பினான்.

விஸ்வாமித்திரர், "சரி, இப்போது நீ விழித்திருக்கும் இந்நிலையில், உன் முழு இராஜ்ஜியத்தையும் எனக்கு அளிக்கிறேன் என்று வாக்குக் கொடு" என்றார். அதற்கு ஹரிச்சந்திரன், "நான் என் முழு இராஜ்ஜியத்தையும் உமக்குக் கொடுக்கிறேன்" என்று பதிலுக்கு வாக்குறுதியை அளித்தான்.

சாஸ்திர விதிப்படி, ஒருவன் தானமாக எந்தப் பொருளைக் கொடுத்தாலும் அதனுடன் சிறிதளவாவது நாணயங்களும் கொடுக்க வேண்டும். எனவே விஸ்வாமித்திரர் ஹரிச்சந்திரனிடம், "என்ன தானம் கொடுத்தாலும், அதனுடன் மிகச் சிறிதளவாவது நாணயங்களும் கொடுக்க வேண்டும்" என்று விதி முறையை எடுத்துரைத்தார்.

"எவ்வளவு நாணயங்கள் வேண்டும்?" என்று ஹரிச்சந்திரன் கேட்டான்.

"பத்தாயிரம் பொற்காசுகள் வேண்டும்" என்றார் விஸ்வாமித்திரர்.

"இவ்வளவுதானா, ஏ நிதி மந்திரியே! முனிவருக்கு பத்தாயிரம் பொற்காசுகளைக் கஜானாவிலிருந்து எடுத்துக் கொடு" என்று மந்திரிக்கு ஆணையிட்டான் ஹரிச்சந்திரன்.

இப்படி ஹரிச்சந்திரன் ஆணையிட்டதைக் கேட்டு, விஸ்வாமித்திரர் சிரித்தார். "ஹரிச்சந்திரா! நீ ஒரு பெரும் பொய்யன். நீ இப்போது எனக்கு அளித்த தானத்தை அதற்குள் மறந்து விட்டாயே? நீ உன் முழு இராஜ்ஜியத்தையும் எனக்குக் கொடுத்த பின் இந்த கஜானா மட்டும் எப்படி உனக்குச் சொந்தமாகும்? நீ வேறு ஏதாவது வழியில்தான் எனக்குக் பொற்காசுகளைக் கொடுக்க வேண்டும்" என்றார்.

விஸ்வாமித்திரரின் குற்றச்சாட்டு ஹரிச்சந்திரனுக்குப் புரிந்தது. "ஓ, அப்படியானால் நான் யாரிடமாவது கடன் வாங்கி அதை உமக்குக் கொடுக்கிறேன்" என்றான்.

விஸ்வாமித்திரர் மேலும் சிரித்தார். "இந்த இராஜ்ஜியத்தின் அனைத்து மக்களும் எனக்கே சொந்தம். அவர்கள் யாரிடமிருந்தும் நீ கடன் வாங்க முடியாது" என்றார்.

இப்போதுதான் ஹரிச்சந்திரன் தன் நிலைமையை உண்மையாக உணர்ந்தான். தனக்கு இப்போது சொந்தம் தன் மனைவியும் மகனும் மட்டுமே என்பதை உணர்ந்து, "நான் என்னையும், என் மகனையும் மனைவியையும் விற்று உமக்குக் கடன்பட்ட பொற்காசுகளைக் கொடுப்பேன்" என்று விஸ்வாமித்திரரிடம் வாக்களித்தான். அதற்கு விஸ்வாமித்திரரோ, "என் இராஜ்ஜியத்தில் நீ எதையும் விற்க முடியாது. வெளியே எங்காவது விற்றுத்தான் எனக்குக் கொடுக்க முடியும்" என்று பதிலளித்தார்.

கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியுமா என்று இப்போது ஹரிச்சந்திரனுக்குச் சந்தேகம் வந்தது. இந்த உலகம் முழுவதையும் ஏக சக்கரவர்த்தியாக ஆண்டதால் எங்கே போய் அவன் தன்னை விற்க முடியும்? அப்போது விஸ்வாமித்திரர் ஒரு யோசனை கூறினார். "காசிப்பட்டினம் இந்த பூலோகத்தில் என் இராஜ்ஜியத்துக்குள் இருந்தாலும், அது உண்மையிலேயே பூலோகத்தைச் சார்ந்ததல்ல. அது தேவர்களுக்குச் சொந்தம். எனவே நீ அங்கே சென்று உன்னை விற்கலாம், போ. ஆனால் அங்கே சென்று எனக்கு இந்தக் கடனை மட்டும் கொடுக்க மறந்து விடாதே" என்றார்.

ஹரிச்சந்திரனும், அவன் மனைவியும் மகனும் காசியை நோக்கிச் செல்ல தயாராயினர். எல்லா வாகனங்களும் குதிரைகளும் இப்போது விஸ்வாமித்திரருக்குச் சொந்தமானதால் அவர்கள் கால்நடையாகக் காசியை நோக்கி நடந்தனர். பல நாட்கள் அல்லல்கள்பட்டு காசியை அடைந்து, அங்கே தெருத்தெருவாக தங்களை விலைக்கு விற்க கூவிக்கொண்டே அலைந்தனர். மேலும், தங்களை அதிக விலைக்கு விற்க வேண்டியிருந்ததால் யாரும் பத்தாயிரம் பொற்காசுகளுக்கு அவர்களை வாங்க உடன் முன் வரவில்லை. ஒரு சுடுகாட்டு வேலை செய்பவன் ஹரிச்சந்திரனை மட்டும் ஐந்தாயிரம் பொற்காசுகளுக்கு வாங்கினான். பின்னர், சிரமத்தின் பேரில் தன் மனைவியையும், மகனையும் ஒரு பெரும் பொல்லாத புரோகிதருக்கு மீதி ஐயாயிரம் பொற்காசுகளுக்கு விற்று, மொத்தம் பத்தாயிரம் பொற்காசுகளையும் தான் உறுதியளித்தபடி விஸ்வாமித்திரரிடம் சமர்ப்பித்தான் ஹரிச்சந்திரன்.

ஒருவன் ஒரு பசுவை இன்னொருவருக்கு விற்றபின் அது அவனுக்கு எந்த வகையிலும் சொந்தம் கிடையாது. இப்போது ஹரிச்சந்திரன் மன்னனும் அல்ல, அவனது மனைவி, மகன் யாரும் இனி அவனுக்குச் சொந்தமும் அல்ல. இருந்த போதிலும் அவன்

உள்ளத்தில் இன்னமும் அவன் தன்னை மன்னன் ஸ்தானத்திலும், அவனது மனைவியும், மகனும் தனக்குச் சொந்தம் என்றும் எண்ணினான். “நான் முன்பு பெரிய அரசனாக இருந்தேன். ஸைப்யா என் மனைவி, ரோகிதஸ்வா என் மகன்” என்று அவன் இன்னமும் நினைத்திருந்தான்.

சில நாட்களில், விஸ்வாமித்திரரின் திட்டத்தாலும், சக்தியாலும் ஹரிச்சந்திரனின் மகன் ரோகிதஸ்வா ஒரு பாம்பால் தீண்டப்பட்டு ஒரு நள்ளிரவில் இறந்தான். மேலும் அன்று பலத்த புயலுடன் கடின மழை பெய்து கொண்டிருந்தது. ஸைப்யாவின் முதலாளியோ மிகவும் கோபம் கொண்டான். “நான் உங்களை அநியாய விலை கொடுத்து வாங்கி என் பணம் அனைத்தும் காலியாகி விட்டது. இப்போது உன் மகன் வேறு இறந்து விட்டான். எனக்கு மேன்மேலும் நஷ்டம். உன் மகனின் பிணத்தை எரிக்க இனி என்னால் பணம் கொடுக்க முடியாது. இந்தப் பிணத்தைத் தூக்கிக் கொண்டு வெளியே போ” என்று கடிந்தார்.

ஸைப்யா கையில் எந்தப் பணமும் இன்றி, வேறு எந்த வழியும் தெரியாமல் தன் மகனின் பிணத்தைத் தான் உடுத்திருந்த துணியினால் சுற்றிப் பொதிந்து தூக்கிக் கொண்டு அந்த கடினமான புயலுடன் கூடிய மழையில் நனைந்து கொண்டும், இருளில் அழுது கண்ணீர்விட்டுக் கொண்டும் சுடுகாட்டை நோக்கி நடந்தாள். அந்தப் பரிதாபமான காட்சியைக் கண்டு வானம் மேன்மேலும் கண்ணீரைத் தண்ணீராய்க் கொட்டியது.

கங்கைக் கரையில் அவள் சென்ற அதே சுடுகாட்டில்தான் ஹரிச்சந்திரனும் வேலை செய்து வந்தான். ஹரிச்சந்திரனுக்கு, அது அவன் மனைவி என்பதை முதலில் அடையாளம் கண்டுபிடிக்க இயலவில்லை. காரணம், அவளது அழுக்கான துணிகளும் உருத்தெரியாமல் போன உடம்பும் மட்டுமல்லாமல், அந்த காரிருளில் கண்களுக்கு ஒன்றும் சரியாகத் தெரியவில்லை.

அப்போது திடீரென பலத்த மின்னல் கீற்றுகள் வானத்தை விட்டுப் பிளந்தது. அந்த வெளிச்சத்தில் தன்முன் நிற்பது தன் மனைவியே என்றறிந்து அவன் திடுக்கிட்டான். அதே நேரம், தன் ஒரே மகனை அவன் பிணமாகப் பார்த்ததும் அவன் இதயம் சுக்கு நூறாக உடைந்து சிதறியது. “இறைவா, இது என்ன?” என்று ஓவென்று கதறி அழுதான்.

இதற்கும் மேலாக, அவனுக்கு இப்போது இன்னொரு புதுக்குழப்பமும் சேர்ந்து கொண்டது. தன் வேலையின் நியதிப்படி அவனால் கூலிப்பணம் வாங்காமல் எந்தப் பிணத்தையும் எரிக்க முடியாது. ஆனால் அவன் மனைவியிடமோ எதுவும் கிடையாது. தன் மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு, “நீ கூலி கொடுக்காமல் பிணத்தை ஒரு போதும் எரிக்க விடமாட்டேன்!” என்றான். அவன் மனைவியோ கதறி அழுதுகொண்டு, “இதோ பாருங்கள், நான் உடுத்திருக்கும் இந்த ஒரே துணியைத்தவிர என்னிடம் எதுவுமே கிடையாது. வேண்டுமானால் இதில் பாதியைக் கிழித்துத் தருகிறேன்” என்று பரிதாபமாகக் கெஞ்சினாள். உலகம் முழுவதையும் ஆண்டு சொர்க்கம்போல் அரண்மனையில் வாழ்ந்தவர்களின் நிலையைப் பாருங்கள்!

அவள் அழுதுகொண்டே தான் உடுத்தியிருந்த துணியை பாதியாகக் கிழித்தாள். அவள் கிழிக்கும் போது அங்கே என்ன ஆச்சரியம்! விஸ்வாமித்திர முனிவர், ஸ்ரீமன் நாராயணர், யம தர்மர், பிரம்ம தேவர் மற்றும் பல தேவர்களும் தோன்றினார்கள். உரத்தகுரலில் விஸ்வாமித்திரர், “ஹரிச்சந்திரா, ரோகிதஸ்வா தான் அடுத்த மன்னன்” என்று கூறினார்.

இறந்த உடலினை விஸ்வாமித்திரர் தொட்டார். “மகனே எழுந்திரு!” என்றார். அடுத்த கணமே ரோகிதஸ்வா கண்களைத் துடைத்துவிட்டு எழுந்து, வானத்தை நோக்கி, நடக்கும் அதிசயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

விஸ்வாமித்திரர் ஹரிச்சந்திரனை நோக்கி, “நான் உன்னிடமிருந்து எல்லாவற்றையும் எடுத்தேன். இப்போது அவை அனைத்தையும் உன்னிடமே திருப்பிக் கொடுக்கிறேன். இந்த இராஜ்ஜியம் இனி உன்னுடையது. ஆனால் நீ உன் மகனை ஆளவைத்து, இப்போது நீ பெற்ற ஞானங்களுடன், உன் பூத உலகத் தொடர்புடைய சம்பந்தங்களை எல்லாம் விட்டு விட்டு வனத்தில் சென்று இறைவனை எப்போதும் தியானிப்பதில் உன் மீதியுள்ள வாழ்நாட்களைக் கழிப்பாயாக” என்று உபதேசித்து அருளினார்.

அவர் மேலும், “இந்தப் பூத உலகில் யாருமே உண்மையை உண்மையாகக் கூற முடியாது. ஏனென்றால் பூத உலகம் பரம உண்மையல்ல. நீயும் ஹரிச்சந்திரன் அல்ல. அது உனது உடலின் பெயரே. உன் உடல் எவற்றால் ஆக்கப்பட்டுள்ளன? மாமிசம், எலும்பு, இரத்தம், மலம், சிறுநீர், இவற்றை உள் அடைத்து பொதிந்திருக்கும் வெறும் தோல்பையேதான் அது! நீ, உன்னை மன்னனாகவும், தந்தையாகவும், கணவனாகவும் எண்ணலாம். ஆனால் உண்மை என்ன? நீ ஒரு ஜீவாத்மா. ஸ்ரீ கிருஷ்ணரின் அம்சமான ஒவ்வொரு ஜீவாத்மாவும் அவருக்கு பரமசேவை செய்வதை மட்டுமே சுய குணமாகக் கொண்டுள்ளன. எனவே எப்போதும் அவரது நாமங்களை ஜெபித்து அவருக்கு மட்டுமே தொண்டு செய்” என்று கூறினார்.

ஹரிச்சந்திரன் மன்னனாக இருந்தபோது அவனுக்கு இறைவன் மேல் ஈடுபாடு இருந்திருந்தாலும் அது போதுமானதாக இல்லை. அவன் மனம் முழுவதுமாக சரணாகதியடையவில்லை. உலகத்தின் பொய்யான உண்மைகளிலேயே பற்றுடன் இருந்தான். அரண்மனை வாழ்க்கையும் அவனுக்கு முழு மகிழ்ச்சியை அளிக்கவில்லை.

விஸ்வாமித்திர முனிவரால்தான் ஆத்ம ஞானத்தையும் உண்மையான உண்மைகளையும் அவன் அறிய முடிந்தது. அது மட்டுமல்ல, ஹரிச்சந்திரனின் பரம்பரையில்தான் பின்னர் ஸ்ரீ ராமச் சந்திர பகவான் அவதரித்தார் என்பது மிகவும் விசேஷமாகக் குறிப்பிடத்தக்கது.

பிறவிகள் மேல் பிறவிகள் பெற்று படிப்படியாக மட்டுமே கிடைக்கப் பெறும் ஆன்ம நிறைவையும், ஞானத்தையும் ஹரிச்சந்திரன் சில நாட்களிலேயே பெற்று விட்டதற்கு விஸ்வாமித்திர முனிவரின் கருணையே காரணம். இவ்வாறு ஒருவனுக்கு சாதுக்களின் கருணை மட்டும் கிட்டினால் போதும், சில கணங்களிலேயே இறைவனின் நெருக்கம் கிடைத்து விடும்! மேலும் இத்தகைய பக்த சரித்திரங்களைக் கேட்பவர்களுக்கும் புண்ணியம் கிட்டுகிறது.

## 4. நாம் ஒவ்வொருவரும் இறைவனின் அம்சமே

வேதங்கள் நமக்கு என்ன போதிக்கின்றன? “இருளில் வாழாதே, வெளிச்சத்தை நோக்கி வா” என்று கூறுகின்றன. இங்கே, வெளிச்சம் என்பது எதைக் குறிக்கிறது? இறைவனைப் பற்றியுள்ள ஆத்ம ஞானத்தையும், நமக்கும் அவருக்கும் உள்ள நிரந்தரமான தொடர்பையும், அவருக்குத் தொண்டுசெய்து பரமானந்தத்தை அடைவதையுமே அது குறிக்கிறது. நாம் அனைவரும் இறைவனின் ஒரு அம்சமே. எனவே நமக்கும் அவருக்கும் ஒரு நிரந்தரமான தொடர்பு உள்ளது. நாம்தான் அந்த உறவை மறந்துள்ளோம். வேதங்களில் அந்த இறைவன் ஸ்ரீ கிருஷ்ணரே என்று எழுதப்பட்டுள்ளது. கிருஷ்ணா என்பதன் அர்த்தம் என்ன? நம்மை முழுமையாக இழுத்து கவரக்கூடியவர். அவரே பரம உண்மை; நித்தியமான ஞான வடிவம். மேலும், அந்த இறைவனுக்கு பற்பல சொரூபங்கள் உள்ளன. ஆனால் அவை எதுவும் வேறுபட்டதல்ல. அவரை சிலர் அல்லா என்றும், சிலர் ஜெஹோவா என்றும் இப்படிப் பற்பல பெயர்களில் அழைக்கின்றனர். ஆத்மா உண்மையான ஆனந்தத்தை அடைய வேண்டுமானால், நாம் நம் நிஜ ஆத்மசொரூபத்தில் இறைவனுக்குப் பக்தி சேவை புரிய வேண்டும். வேறு எந்த வகையிலும் உண்மையான ஆனந்தத்தை அடைய முடியாது.

இருள் என்பது எதைக் குறிக்கிறது? ஆன்மீக அறியாமையே இருள்! நம் உடல்தான் நாம் என்று எண்ணுவதும், நம்மை இந்த அழியும் உலகத் தொடர்புடன் இணைத்து வாழ்வதும், ஜடப் பொருட்களின் மேல் ஆசை வைத்து, அதை அடைவதற்காக தேவையில்லாத அல்லல்கள் படுவதும் இவையெல்லாம் அந்த அறியாமை என்ற இருளே ஆகும்.

உலகிலுள்ள ஒவ்வொருவருமே தாம் எந்த விதமான கவலையோ சிரமமோ இன்றி எப்போதும் ஆனந்தமாக இருக்க வேண்டும் என்றே ஆசைப்படுகின்றனர். இது இயற்கை. கஷ்டப்படுவதற்கு யாருக்குமே விருப்பம் கிடையாது. ஆனால் தொன்று தொட்டே ஒவ்வொருவரும் இந்த சந்தோஷத்தை அடைவதற்காக என்னவெல்லாமோ முயற்சிகள் செய்துள்ளனர். ஆனால் எவருடைய முயற்சியும் இதுவரையிலும் உண்மையில் வெற்றியடையவேயில்லை. வாழ்க்கையில் வசதியாக இருக்கவும், கேளிக்கைகளுக்காகவும் மகிழ்ச்சிக்காகவும், கணினி, விமானம், இரயில், நவீன மருந்துகள் இப்படி நிறைய கண்டுபிடித்துள்ளனர். ஆனால் இவையெல்லாம் உண்மையாகவே நமக்குப் பூரண மன மகிழ்ச்சியை அளிக்கின்றனவா? இல்லை. மாறாக, அவை நம்மை மென்மேலும் மாயையில் இழுத்துச் செல்கின்றன. மேலும், அளவற்ற செல்வங்களைக் குவித்து அவற்றால் மகிழ்ச்சியை விலைக்கு வாங்க இயலுமா? அதுவும் இயலாது. இவை எதுவுமே ஒருவனின் ஆத்மாவுக்கு நிரந்தரமான சந்தோஷத்தை எப்போதும் அளித்ததேயில்லை.

ஆனால், இவை எல்லாவற்றையும் விட சரியான வழி ஒன்று உள்ளது. அது ஒருவனுக்கு பிறப்பு இறப்புக்களிலிருந்து விடுதலையும் தந்து, பரம ஆனந்தத்தையும் அளிக்கிறது. அதுவே "பக்தி யோகமாகும்". பக்தி யோகம் என்றால் இறைவனை சுத்த பக்தியினால் வழிபடுவது என்று பொருள். அதைப் பின்பற்ற பொருளோ, பணமோ தேவையில்லை உழைப்போ சக்தியோ கூடத் தேவையில்லை. ஆனால் அதைக் கடைப்பிடித்தால் நமக்குப் பரம ஆனந்தம் உண்டாகிறது. சுமார் ஐந்நூறு வருடங்களுக்கு முன்பாக ஸ்ரீ கிருஷ்ணரே பூவுலகில் ஸ்ரீ சைதன்ய மகாபிரபுவாக அவதரித்தார். ஒரு ஜீவன் எவ்வாறு சுத்த பக்தியினால் இறைவனை அடையலாம் என்பதை, தாமே உதாரணமாகச் செய்து காட்டினார். பக்தி யோகத்தினால் ஒரு ஜீவாத்மா, தான் எவ்வாறு இறைவனின் ஒரு அம்சம் என்பதை மிகவும் தெள்ளத் தெளிவாக அறிந்து கொள்ள முடியும். பக்தி நிலையில் பக்குவப்படும்போது ஒருவன் அனைத்து ஜீவராசிகளிடமும் மிகவும் அன்புடனும் கருணையுடனும் நடந்து கொள்கிறான். ஏனென்றால் எல்லா ஜீவன்களுமே அந்த ஒரே இறைவனின் அம்சம் என்ற உண்மையை அவன் உணர்ந்து விடுகிறான்! அப்போதுதான் உண்மையான ஆனந்தம் கிட்டுகிறது.

இதே சமயம் இன்னொரு உண்மையையும் இங்கே புரிந்து கொள்ள வேண்டும். பூத உலகில் பிறந்த ஒவ்வொரு ஜீவராசியிடமும் நாம் தனித்தனியாக நேரடி அன்பு வைப்பதும் அவ்வளவு எளிதானதல்ல. உதாரணமாக, நாம் புலி அல்லது சிங்கத்தின் முன்னால் செல்ல முடியாது. அது போல் விஷமுள்ள பாம்பின் முன்னாலும் போக முடியாது. அவை நம்மைத் தாக்கி, கடித்துக் கொன்று விடும். ஒருவன் உண்மையிலேயே எல்லா உயிர்களிடமும் அன்பு செலுத்த வேண்டுமானால், அதை முதன்முதலாக செலுத்த வேண்டிய இடம் இறைவனிடமே! அப்போது அந்த அன்பு தானாகவே அனைத்து ஜீவராசிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு அவை எல்லாமே ஆனந்தமடையும். இதுவே உண்மையான அன்பு செலுத்தும் வழி.

ஒருவன் மென்மேலும் உயர்ந்த பக்தி நிலையை அடையும் போது அதே புலி, சிங்கம், பாம்பு அனைத்தையும் எளிதாக அடக்கியாளலாம். பெரிய முனிவர்களெல்லாம் அடர்ந்த காடுகளில் எவ்வளவோ கொடிய மிருகங்களுக்கிடையில் வாழ்ந்து கடுந்தவங்கள் புரிந்தனர். அவர்களை கொடிய மிருகங்கள் எதுவும் தாக்கவில்லை. மாறாக அவைகளின் கொடிய குணங்கள் நீங்கப் பெறுகின்றன. (உதாரணமாக, ஸ்ரீ சைதன்ய மகாபிரபு ஸ்ரீ கிருஷ்ணரின் நாமத்தைப் பாடிய போது, காட்டிலுள்ள புலி, சிங்கம், யானை அனைத்தும் ஆனந்தத்தால் நடனமாடின.) நாம் இறைவன் பால் செலுத்தும் சுத்தமான பக்தியே எல்லோரிடமும் அன்பு செலுத்துவதற்குச் சமமாகும்.

## 5. இறைவனின் இயற்கையான சொரூபம்

இறைவன், அனைத்து அண்ட சராசரங்களையும் எண்ணிலடங்காத உருவங்களில் விதவிதமாகப் படைத்துள்ளார். ஆனால் அவருக்கு மட்டும் ஏன் உருவம் இருக்கக் கூடாது? உண்மையில் அவருக்கு அளவில்லா சக்தியும் மகிமையும் இருக்க வேண்டும். நாம் இந்தப் பூவுலகில் காணும் கோடிக்கணக்கான உருவங்கள் அனைத்தும் அவரிடமிருந்து மட்டுமே பிறந்தவை. அப்படியிருக்கையில் அவருக்கு மட்டும் ஏன் உருவம் இருக்கக் கூடாது? அவருக்கு உருவம் உண்டு. ஆனால் அது நம் ஊனக் கண்களாலோ பூதவுலக நோக்கினாலோ காணக்கூடியதல்ல. அவர் எல்லாவற்றையும் தாண்டி ஆன்மீக (Spiritual) சொரூபத்தில் உள்ளார். பைபிளில் மனிதனை அவர் தன் சாயலிலேயே படைத்ததாக எழுதப்பட்டுள்ளது. இதையே வேதங்களும் உறுதிப்படுத்துகின்றன.

இறைவன் எப்போதும் நிரந்தரமானவர். வேதங்கள் இறைவனின் சொரூபங்களை மூன்று விதமாகக் கூறுகின்றன.

1.பிரம்மம் : அவரது சுய ரூபத்தினின்று கிளம்பி பரந்திருக்கும் உருவமில்லாத ஆன்ம வெளிச்சம் (Effulgence).

2.பரமாத்மா : அவர் ஒவ்வொரு ஜீவராசியின் இதயத்திலும் ஜீவாத்மாவுடன் சேர்ந்து வீற்றிருக்கும் சொரூபம்.

3.பகவான் : இதுவே அவரது சுயரூபம். பிரம்மத்தையும் பரமாத்மாவையும் தாண்டி அளவில்லாத சக்தியுடனும் முழு மகிமையுடனும் வீற்றிருக்கும் வடிவம். இந்த சொரூபமே முழுமையானது. மற்ற சொரூபங்கள் அனைத்தும், பகவான் சொரூபத்திலிருந்து பிறந்த முழுமையற்ற (Partial) சொரூபங்களாகும். பகவான் சொரூபத்தில் மற்ற அனைத்து சொரூபங்களும் உள்ளடங்கி உள்ளன.

அனைத்து அண்ட சராசரங்களும் ஒரு மிகச்சிறிய பாகமாக இறைவனுள் அடங்கியுள்ளன. அதே சமயம் நீர், காற்று, அக்கினி போன்ற அனைத்திலும், ஒவ்வொரு அணுவிலும் பரந்து அவர் எங்கும் நிறைந்து இருக்கிறார். அவர் எல்லாவற்றையும் எப்போதும் அறிவார். அவருக்குத் தெரியாமல் எதுவுமேயில்லை.

இறைவனையன்றி வேறு எதுவும் எங்கேயும் கிடையாது. ஒன்றே இறைவன். கிறிஸ்தவர்களுக்கும், முகமதியர்களுக்கும், இந்துக்களுக்கும் இவை போன்ற எல்லா மதத்தினருக்கும் இறைவன் ஒருவனே. வெவ்வேறு இறைவன்கள் அல்ல. அந்த ஒரே இறைவனைத்தான் அல்லா என்றும் ஜஹோவா என்றும் அழைக்கின்றனர். எப்படி நம் பூவுலகத்துக்கு ஒரே ஒரு சூரியனோ அல்லது ஒரே ஒரு சந்திரனோ, அதே போல் நம் அனைவருக்கும் இறைவன் ஒருவனே. ஆனால் அவர் நம் புலனுக்கு எட்டியது போல் வெவ்வேறாகக் காணப்படுகிறார்.

வானத்துச் சந்திரனை எடுத்துக் கொள்ளுங்கள். அது அமாவாசையில் ஆரம்பித்து பதினைந்து நாட்களும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு உருவத்தில் தோற்றமளிக்கிறது. இதனால் நாம் பதினைந்து சந்திரன்கள் உள்ளன என்று கூற முடியுமா? நாம் முழுச் சந்திரன், அரைச் சந்திரன், கால் சந்திரன், அரைக்கால் சந்திரன் என்று எப்படி அழைத்தாலும் அவை அனைத்தும் அந்த ஒரே சந்திரனை அல்லவோ உண்மையில் குறிக்கின்றன! அதே போல்தான், மக்கள் வித்தியாசமான மொழி, கலாச்சாரம், பண்பாடு இவற்றால் மற்றவர்களிடமிருந்து பிரித்துக் கொண்டு, இறைவனை வித்தியாசமாக உணர்கின்றனர். ஆனால் அவை அனைத்தும் அந்த ஒரே இறைவனையே குறிக்கின்றன.

இறைவனின் பல்வேறு வடிவங்களும், அவரது அவதாரத் தோற்றங்களும் அவரிடமிருந்து வேறானவை அல்ல. சில அவதாரத் தோற்றங்களுக்குச் சக்தியும் மகிமையும் அதிகம். மற்ற சொரூபங்களுக்குச் சக்தியும் மகிமையும் கொஞ்சம் குறைவானதாகத் தோன்றும். ஆனால் அவை அனைத்துமே நாம் முழுச் சந்திரன், அரைச் சந்திரன் என்று காண்பது போலவேயாகும். உண்மையில் அவையெல்லாம் அந்த ஒரே முழுச்சந்திரனின் வித்தியாசமான பரிணாமங்களே. நமக்கு வளர்பிறை சந்திரன்களாகவும் தேய்பிறை சந்திரன்களாகவும் தோன்றுவதெல்லாம் அந்த ஒரே சந்திரன் தானே? அதே போல் தான் ஸ்ரீ கிருஷ்ணரே எல்லாவற்றுக்கும் அப்பாலான பகவான் சொரூபத்தில் இருக்கும் இறைவன். அவரைத்தவிர இன்னொரு இறைவன் கிடையாது. ஆனால், அவர் எண்ணிலடங்கா தோற்றங்களில் உள்ளார். சில சமயங்களில் தாமே நேராக இவ்வுலகில் வந்து தோன்றுகிறார். இன்னும் சில சமயங்களில் அவருடைய நெருங்கிய ஜீவன்களை பூவுலகத்துக்கு அனுப்பி வைத்து சுத்த

ஞானத்தை உலக ஜீவன்களுக்குக் கற்பிக்கிறார். ஒவ்வொரு உயிரும் தத்தம் உண்மையான சுய தர்மத்தின்படி அவை இறைவனின் சேவகர்களே. ஆனால் இந்த பூதவுலகங்கள் படைக்கப்பட்ட நாட்களிலிருந்தே நாம் இறைவனை மறந்துவிட்டோம். இங்கே இந்தப் பூவுலகில் மாயையின் வலையில் சிக்கிக் கொண்டு, பிறவிப்பிணிகளிலும், துக்கங்களிலும் உழன்று தவிக்கிறோம். ஆனால், தன் அளவுகடந்த கருணையினால் இறைவன் அவ்வப்போது பூவுலகில் தோன்றி, தித்திக்கும் பல அற்புத லீலைகளை நடத்தி நம்மை அவர்பால் ஈர்க்கிறார். தனது சக்தி வாய்ந்த லீலைகளினால் ஜீவாத்மாக்களை தன்பால் இழுத்து அவர்களை பேரானந்தத்தில் திளைக்க வைக்கிறார்.

இந்த உலகத்தில் யாராவது சூரியன் கிடையாது என்று கூறுவார்களா? அப்படியென்றால் கோடிக்கணக்கான சூரியன்களைப் படைத்த இறைவனை மட்டும் ஏன் இல்லை என்று மறுக்கின்றனர்? இறைவனால் கோடிக்கணக்கான பிரம்மாண்டங்களை அவரது ஒரு சிறு பார்வையினாலேயே ஆக்கவோ அழிக்கவோ முடியும். இந்தப் பூவுலகில் அவர் அவதரிப்பது அவரது அளவற்ற கருணையையே காட்டுகிறது. ஜீவாத்மாக்கள் தன்னிடம் பக்தி செலுத்தி, அவை அனைத்தும் பேரானந்தம் அடைய வேண்டுமென்பதே அவரது வருகையின் முக்கியக் குறிக்கோள். அந்த ஆனந்தத்தைத் தவிர பெரிய ஆனந்தம் வேறு எதுவும் இல்லை. இறைவன் ஒருவனே. நாம் நம் அறியாமையால் நமக்கும் இறைவனுக்கும் உள்ள பரம சொந்தத்தை மறந்து துக்ககரமான இந்தப் பூவுலகில் மாட்டிக்கொண்டு மகிழ்ச்சியின்றி வாழ்கிறோம். எண்ணற்ற முறை பிறந்தும் இறந்தும் கொண்டே இருக்கின்றோம்.

இறைவனுக்கு சேவகம் செய்வதில் கொஞ்சம் கூட பயமோ தயக்கமோ கொள்ளலாகாது. இந்தப் பூலோகத்தில்தான் எஜமான் இலாபமும், சேவகன் நஷ்டமும் சம்பாதிப்பார்கள். ஆனால் இந்த விதி ஆன்மீக உலகத்தில் செல்லாது. அங்கே இந்த விதி தலைகீழானது. இறைவனுக்குச் சேவை செய்வதில் கிடைக்கும் பேரானந்தம் வேறு எதிலுமே கிடைப்பதில்லை. ஒருவன் தன் மனைவி, குழந்தைகள், அப்பா, அம்மா போன்ற சொந்த பந்தங்களுக்கு இங்கே சேவை செய்து வரும் அற்ப மகிழ்ச்சியை அதனுடன் ஒப்பிட்டு நினைக்கக் கூட முடியாது. கிருஷ்ணலோகத்தில் உள்ள சேவானந்தத்தை எத்தனை எத்தனை ஆனந்த சமுத்திரங்களுடனும் ஒப்பிட முடியாது. மேலும் அந்த ஆனந்தம் என்றும் அளவின்றி மென்மேலும் பெருகக்கூடியது. இந்த பரம உண்மையை உறுதியாக நம்புங்கள். நாம் அனைவரும் இறைவனின் அம்சங்கள் என்பதிலோ, நம் சுயசுபாவம் அவருக்கு நிரந்தர (Eternal) சேவை செய்வது மட்டுமே என்பதிலோ ஒருபோதும் சந்தேகம் கொள்ளாதீர்கள்.

## 6. ஆத்ம உணர்வுக்கு வழிமுறை

இறைபக்தி மிகுந்த சத்ய யுகத்தில் மானிடர்கள் ஆயிரக்கணக்கான வருடங்கள் வாழ்ந்தனர். அவர்கள் தெய்வ நம்பிக்கை உள்ளவர்களாகவும் பரிசுத்தமானவர்களாகவும் அமைதியானவர்களாகவும் வாழ்ந்தனர். அவர்கள் அனைவரும் இறைவனைத் தியானம் செய்வதிலேயே தங்கள் வாழ்நாட்களைக் கழித்தனர். ஆனால் இப்போது நடந்து கொண்டிருக்கும் கலியுகத்திலோ, நம் மனம் எப்போதும் அலைபாய்ந்து கொண்டேயிருப்பதால் தியானம் செய்வது மிகக் கடினம். நாம் இப்போது வாழ்ந்து வரும் கலியுகத்தில் இறைவனை உணர ஒரே ஒரு வழியை மட்டுமே சாஸ்திரங்கள் கூறுகின்றன. அது என்ன? இறைவனின் நாமங்களை எப்போதும் உச்சரித்துக் கொண்டும் (Chanting), பாடிக்கொண்டும் (Kirtan) வாழ்வதே அது. அப்போது நாம் அவரது கருணைக்குப் பாத்திரமாகி அவரை நேருக்கு நேர் பார்க்கவும் அடையவும் முடியும். மேலும், இந்தக் கலியுகத்தில் இப்படி இறைவனின் நாமங்களை உச்சரிப்பதையும் பாடுவதையும் தவிர வேறு எந்த வழியாலும் இறைவனை அடையமுடியாது என்று அந்த சாஸ்திரங்கள் அடித்துக் கூறுகின்றன. அந்த மஹா மந்திரம் தான் என்ன?

“ஹரே கிருஷ்ணா ஹரே கிருஷ்ணா
கிருஷ்ணா கிருஷ்ணா ஹரே ஹரே
ஹரே ராமா ஹரே ராமா
ராமா ராமா ஹரே ஹரே”

இதுவே அந்த தாரக மந்திரம்.

இந்தக் கலியுகத்தில் வெளிவேடமும், சண்டையும், சச்சரவுகளுமே மலிந்துள்ளன. இறைவனின் நாமங்களை

உச்சரித்தும், பாடியும், இறைவனையும் ஆன்மீக உண்மைகளையும் உணர்வது கலியுகத்தில் எளிதான வழியாகும். அவரது நாமங்களை நாம் ஆங்கிலம், மலாய், தமிழ், ஸ்பானியம், சீனம் - இப்படி எந்த மொழியில் வேண்டுமானாலும் உச்சரிக்கவும் பாடவும் செய்யலாம். எவரையும் ஈர்த்திழுக்கும் அனைத்து சக்திகளும் அடங்கிய அந்த கருணைக் கடலான பரமனின் நாமங்களை ஜெபிக்கும் போது, அவர் உன் விருப்பம் போல் எந்த உறவு முறையிலும் (எஜமான், நண்பன், மகன், அன்புக்குரியவன்) உன்னிடம் நெருங்கி வந்து நேரடியாக விளையாடுவார்!

அதே சமயம், அவரது நாமங்களை உச்சரிப்பதில் சில விதிமுறைகளும் உள்ளன. இந்த விதிமுறைகளைக் கடைப்பிடித்தால்தான் அதற்கு முழுப் பலன் உண்டு. மேலும், அந்த இறைவனே இந்த விதிமுறைகளை நமக்கு அளித்தும் இருக்கிறார். இறைவனிடமே தொடங்கி சிஷ்ய முறைப்படி குரு பரம்பரையாக வந்த குருவிடமிருந்து அந்த நாமங்களை மந்திரங்களாகப் பெற்று அதை இந்த விதிமுறைகள் படி உச்சரித்தால் அது மிக நன்மை பயக்கும்.

# 7. உண்மையான குரு

“நீ உன் காதுகளை மட்டும் என்னிடம் கொடு. உன் மற்ற புலன்களை என்னிடம் கொடுக்கத் தேவையில்லை. உன் காதுகளை மட்டுமே கொடு. அது போதும்” என்று மகிமை மிக்க குருபரம்பரையில் வந்த ஒரு குரு கூறுகிறார். காதுகளுக்கு மட்டும் ஏன் இத்தனை முக்கியத்துவம்? நம் எல்லாப் புலன்களை விடவும் காதுகளுக்கு மட்டுமே ஒலியைக் (சப்தம்) கேட்கும் சக்தி உள்ளது. காதுகளால் மட்டுமே ஆன்மீக நிலையின் *(Transcendental)* ஒலியையும் கேட்க இயலும். மேலும் குருபரம்பரையில் வந்த குருவால் மட்டுமே நம்மை இறைவனிடம் பணிய வைத்து, இறைவனின் நாமத்தைக் கேட்பதிலும் சரியாக உச்சரிப்பதிலும் ஈடுபடுத்த முடியும். அந்த நாதத்தால், இதயத்தின் உள்ளிருக்கும் இறைவனை - ஸ்ரீ கிருஷ்ணரை அவர் நமக்குத் தெரியப்படுத்துகிறார். இறைவனின் நாமம் நமக்கு காதுகள் வழியாக மட்டுமே முதலாவதாக உணர்த்தப்படுகிறது.

இரண்டு வகையான சப்தங்கள் உள்ளன. ஒன்று, ஆன்மீக உலகத்தோடு தொடர்புடைய ஆன்மீக ஒலி (சப்தம்). இது இறைவனிடமிருந்து குரு பரம்பரை பரம்பரையாக வருவது. மற்றொன்று பூத உலகத்தோடு தொடர்புடையது. அது வெறும் பூத நாவிலிருந்து மட்டுமே வருவது. முதிர்ந்த சுத்த குருவிடமிருந்து அளிக்கப்படாத மந்திரங்களால் பலன்கள் கிடையாது. இறைவனின் நாமங்கள் இயற்கையாகவே மிகவும் சக்தி வாய்ந்தவை. ஆனாலும், அவற்றை மந்திரங்களாக குருவிடமிருந்து கேட்கும் போதுதான் அதற்கு இறைவனின் முழுஅருள் கிடைக்கிறது. இல்லாவிடில் அந்த மந்திரங்கள் வெறும் பூத உலக சப்தங்களாக மட்டுமே ஒலிக்கும். எனவேதான் உண்மையான குருவிடமிருந்து மந்திரங்களை முறையாகக் கேட்டு அதன்பின் உச்சரிக்க வேண்டும். முற்றும்

உணர்ந்த குருவுக்கு இறைவனின் நாமங்களை எவ்வாறு சுத்தமாக உச்சரிக்க வேண்டுமென்றும், அவற்றை இறைவனின் அருளுடன் சிஷ்யனுக்கு எவ்வாறு கலந்து கொடுக்க வேண்டும் என்பதும் நன்றாகத் தெரியும். எனவே தகுதி பெற்ற குருவிடமிருந்து மட்டுமே மந்திரத்தைப் பெற வேண்டும்.

இனி, 'பக்தி' என்றால் என்னவென்று பார்ப்போம். வேத சாஸ்திரங்களில் பக்தியென்பதற்கு கீழ்க்கண்டவாறு விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

"சுத்தமான பக்தியென்பது, ஸ்ரீகிருஷ்ணருக்கு மட்டுமே சம்பந்தமான செயல்களில் ஈடுபட்டு, அவரை மகிழ்விப்பதை மட்டுமே குறிக்கோளாகக் கொள்வது. அது தன் மனம், வாக்கு, காயம் இவைகளால் எவ்வித தடையுமின்றி தொடர்ந்து கிருஷ்ண சேவையில் மூழ்கி பக்தி ரசத்தினால் அனைத்தையுமே அவருக்காக மட்டுமே செய்வதாகும். மேலும், சிறிது கூட ஞானம் பொதியப்படாமலும், முக்தியில் சிறிது கூட விருப்பமில்லாமலும், பதில் உபகாரம் எதையுமே எதிர்பார்க்காமலும், முழுக்க முழுக்க கிருஷ்ணரின் மகிழ்ச்சியைத் தவிர, தனக்கோ, பிறருக்கோ, எந்தவிதமான ஆசையுமின்றி, தன் முழு எண்ணங்களையும் எல்லாச் செயல்களையும் கிருஷ்ணருக்காக மட்டும் செய்வதே பக்தியாகும்." (பக்தி ரஸாம்ருத சிந்து 1.1.11)

மேலும், வேத சாஸ்திரங்கள் எந்தவிதமான குணநலன்களை உடைய குருவிடம் சரணடைந்து பக்தி யோகத்தைக் கேட்டு கடைப்பிடிக்க வேண்டும் என்பதையும் கூறுகின்றன. அத்தகைய குணநலன்களை ஒரு குரு அடைந்திருந்தால் அவர் மிகவும் சுத்தமான பக்தன் என்பதை அறிந்துகொள்ளலாம். "பரம ஆனந்தத்தில் தீவிரமான சிரத்தை உடைய ஒவ்வொருவரும் குரு பரம்பரையில் வரும் உண்மையான *(bonafide)* குருவை அணுகி அவரிடம் சரணடைந்து சிக்ஷை எடுத்துக் கொள்ள வேண்டும். மேலும் உண்மையான குருவின் அடையாளம் என்னவென்றால், அவர் பொருளாசைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவர்; சாஸ்திரங்களில் கூறப்பட்டவை அனைத்தையும் நன்கு அறிந்து உணர்ந்து, உலக மக்களையெல்லாம் இறைவன் பால் முழு நம்பிக்கை கொள்ளச் செய்பவர்".(பக்தி ரஸாம்ருத சிந்து 1.2.97)

இறைவனிடம் சுத்த பக்தியுடன் தொண்டு செய்யும் குருவுக்கு ஏன் அவ்வளவு முக்கியத்துவம்? ஏன் அவரிடமிருந்து மட்டுமே நாம் இறைவனின் நாமத்தை மந்திரமாகக் கேட்டுக் கொள்ள வேண்டும்? இதற்கு, வால்மீகியின் சரித்திரம் தகுந்த பதிலளிக்கிறது.

வால்மீகி, மிகவும் உயர்ந்த புரோகித வகுப்பில் பிறந்திருந்தும் கொடியவர்களின் தொடர்பினால் மிகவும் கெட்டவராக இருந்தார். கொலை, கொள்ளைகளை அளவின்றிப் புரிந்தார். ஒரு சமயம் நாரதமுனி அந்த வழியில் செல்லும் போது வழக்கம் போல் அவரையும் கொள்ளையடித்து கொலை செய்ய வால்மீகி நெருங்கினார். ஸ்ரீ கிருஷ்ண பகவானின் மிக நெருங்கிய பக்தரான நாரதமுனி தன் கையை உடனே உயர்த்தி "நில்" என்றார். அவ்வளவு தான், எதற்குமே அஞ்சாத வால்மீகி, மந்திரத்தால் கட்டுண்டதைப் போல் அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டார். அது மட்டுமல்ல. நாரத முனியின் சக்தியினால் வால்மீகியின் மனம் நாரதரிடம் சரணடைய விரும்பியது. வால்மீகி இதுவரை செய்த கொடிய செயல்களினால், எந்தெந்த வகையான நரகங்களிலெல்லாம் அவர் சித்திரவதை செய்யப்பட இருக்கிறார் என்ற அனைத்தும் அவர் கண்முன் நிஜம் போல் ஒவ்வொன்றாகத் தெரிந்தன. மேலும் அவர் செய்யும் பாவங்களில் அவர் சுற்றத்தார் எவருமே பங்கெடுக்காமல் அவர் மட்டுமே நரக வேதனைப்பட வேண்டிய உண்மையையும் நாரதர் விளக்கினார். வால்மீகிக்கு இப்போதுதான் தனது நிலைமை புரிந்தது. நாரதரின் காலில் விழுந்தார். தன்னை எப்படியாவது இந்தப் பாவங்களிலிருந்து விடுதலைசெய்யுமாறு நாரதரை வேண்டி கெஞ்சினார். கதறி அழுதார்.

"கீழே உட்கார். நீ ராமா ராமா ராமா ராமா என்று இடைவிடாமல் சொல். இதைத்தவிர நீ வேறு எதுவுமே கண்டிப்பாக செய்யக் கூடாது!" என்று நாரதமுனி கண்டிப்பான கட்டளையிட்டார். ஆனால் வால்மீகியோ, மகா கொடும் பாவங்களைச் செய்ததால் அவரால் "ராமா" என்று சொல்ல முடியவேயில்லை. எவ்வளவு நேரம் முயற்சி செய்தும் இறைவனின் நாமத்தை ஒருதடவை கூடச் சொல்ல முடியவில்லை. சாவு, கொலை, கொள்ளை பற்றி மட்டுமே அவரது உயிரில் நிறைந்திருந்தது. கருணைக் கடலான நாரத முனிவர் ஒரு தந்திரம் செய்தார். "உன்னால் ராமா என்று கூற இயலவில்லையென்றால், 'மாரா மாரா' என்று தொடர்ந்து சொல்" என்று கட்டளையிட்டார்.

“மாரா” என்றால் சமஸ்கிருதத்தில் சாவு என்று அர்த்தம். ஆனால் இதை மாற்றிச் சொன்னால் “ராமா” என்று ஆகிவிடும். எனவே வால்மீகி, “மாரா மாரா” என்று தொடர்ந்து சொல்லும் போது “ராமா ராமா” என்று வந்துவிடுகிறது! இதை உபதேசித்துவிட்டு நாரத முனிவர் அங்கிருந்து சென்றுவிட்டார்.


வால்மீகி, தன் குருவான நாரதமுனி உபதேசித்த மந்திரத்தை ஆயிரக்கணக்கான வருடங்கள் தியானம் (Chanting) செய்து கொண்டு, எப்போது தன் குருதேவர் திரும்பி வருவார் என்று காத்துக் கொண்டிருந்தார். அவ்வளவு நாட்களும் அவர் உண்ணவோ, நீர் அருந்தவோ, மலம், சிறுநீர் எதுவும் கழிக்கவோ செய்யாமல் மந்திர ஜெபத்திலேயே முழுவதுமாக மூழ்கியிருந்தார். அவரது உடலின் சதை, இரத்தம் அனைத்தையும் எறும்புகள் சாப்பிட்டு, அவரைச்சுற்றி எறும்புப் புற்று எழும்பியிருந்தது. அவரது உடல் முழுவதும் மறைந்து எறும்புப் புற்றாகவே உருமாறி இருந்தது! இந்தக் கடும்தவத்தை உலகத்தைப் படைத்த பிரம்மதேவர் அறிந்து அங்கே எழுந்தருளினார். வால்மீகியின் உடலையும் அவரது நிலையையும் கண்டு மிக வியந்து, அவரது கமண்டலத்திலிருந்து சிறிது கங்கை நீரை எடுத்து புற்றாய் தோன்றிய வால்மீகியின் உடலில் தெளித்தார். அவ்வளவுதான்! வால்மீகியின் உடல் மிகவும் இளமையுடனும், பேரழகுடனும் திரும்ப வந்தது.

பிரம்மதேவர், “வால்மீகி! உன் தவம் மிகச் சிறந்தது. இப்போது நீ மந்திரத்தைத் தியானிப்பதிலும் உச்சரிப்பதிலும் மிகச் சிறந்து விட்டாய். இறைவனையும் நீ உணர்ந்து விட்டாய்” என்று அருள் கூறினார். இந்த வால்மீகியே பின்னர் இராமாயணத்தை எழுதினார்.


வால்மீகியைப் போல் இப்போது யாராலும் தவமிருக்க இயலுமோ? நம்மால் ஒருநாள் கூட சாப்பிடாமலோ, நீர் அருந்தாமலோ, இருக்க இயலுவதில்லை. அப்படியிருக்கும் போது வருடக்கணக்காக நம்மால் எவ்வாறு தியானத்தில் இருக்க முடியும்? நம்மால் வெறும் பன்னிரண்டோ, அல்லது ஆறு மணி நேரம் கூட தியானத்தில் இருக்க முடிவதில்லை. ஆனால் அதிர்ஷ்டவசமாக, இந்த கலியுகத்தில் நமக்கு ஓர் எளிய வழி உள்ளது! இது சாஸ்திரங்களில் வலியுறுத்துகின்ற ஒரு மிக உன்னதமான வழியாகும். அது என்ன? குரு பரம்பரையில் தொன்று தொட்டே வரும் ஓர் உண்மையான குருவிடம், ஸ்ரீ கிருஷ்ணரின் நாமத்தை மந்திரமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். பின் அந்த நாமத்தைப் பாடிக் கொண்டும் எப்போதும் உச்சரித்துக் கொண்டும் வாழ்ந்தால் நாம் பரம ஆனந்தத்தைக் கண்டிப்பாகப் பெறுவோம்!

“ஹரே கிருஷ்ணா ஹரே கிருஷ்ணா
கிருஷ்ணா கிருஷ்ணா ஹரே ஹரே
ஹரே ராமா ஹரே ராமா
ராமா ராமா ஹரே ஹரே”

- நிறைந்தது -




ஸ்ரீ ஸ்ரீமத்
பக்தி வேதாந்த நாராயண மகாராஜா



ஸ்ரீ ஸ்ரீமத்
பக்தி வேதாந்த சுவாமி பிரபு பாதா



உன்னதமான, நிரந்தரமான, ஆனந்த சொரூபமான ஸ்ரீமதி ராதாவுடன் ஸ்ரீகிருஷ்ணர். முடிவில்லாத, எல்லை இல்லாத, ஆனந்த சொரூபமான ‘ராமா’ என்பவரும் அவரே.



நாரத முனிவர் தன் கையில் எப்போதும் வீணையை வைத்திருப்பார். அவர் அளவில்லா அறிவும், எல்லையில்லா ஆனந்தமும் கொண்ட மகா பெரும் முனிவர். இங்கே தன் சக முனிவரான பர்வத முனியுடன் நாரதர் செல்கிறார்.



எல்லா உடல்களிலும் ஜீவாத்மாவைத் தொடர்கின்றவரான பரமாத்மாவைக் காண்பவனும், ஆத்மாவோ பரமாத்மாவோ என்றும் அழிக்கப்படுவதில்லை என்பதைப் புரிந்து கொள்பவனுமே உண்மையில் காண்பவன் ஆகின்றான்.



சாளரத்துவாரத்தின் வழியாக வரும் சூரியக் கதிர்களில் மிதக்கும் தூசிகள் போல் அளவில்லாத பிரமாண்டங்கள் இறைவனின் மயிர்த்துவாரத்திலிருந்து கிளம்புகின்றன.

(ஸ்ரீமத் பாகவதம்)